# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# அரையாண்டுப் பரீட்சை 2023

ஆண்டு: விசேட வகுப்பு மேற்பிரிவு திகதி: 17.06.2023

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி உஷா ஜவாகர்

மாணவர் பெயர்: ______________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 25 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 20 | |
| வினா 4 | 20 | |
| வினா 5 | 15 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 25 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**புலியும் நரியும்**

ஒரு வேடன் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். மிருகங்களை தனது கூரிய அம்புகளால் வேட்டையாடி அதிகமான மிருகங்களைக் கொன்றான்.

ஒரு நாள் அவன் காட்டுக்குள் போய் மிருகங்களை வேட்டையாடும் போது மிருகங்கள் அவனைப் பார்த்து மிகுந்த பயம் கொண்டு ஆபத்தில் இருந்து தங்களைக் காத்துக் கொள்ள எல்லா பக்கமும் ஓடி ஒளிந்தன.

அவைகளைப் பார்த்த புலி, "நீங்கள் பயப்படாதீர்கள், நானே தனியாகச் சென்று போராடி அவனைக் கொன்று விடுகிறேன்" என்றது. புலியின் வீர உரைகளை கேட்ட வேடன் உடனே அம்பை எடுத்து புலி மீது எய்தான். அது புலியின் வாலில் பாய்ந்தது. அதிலிருந்து இரத்தம் அதிகமாக வடிந்ததால் புலி கீழே சாய்ந்தது.

பக்கத்தில் நின்ற நரி அதைப் பரிகாசமாகப் பார்த்து கேலி செய்தது.

"உன் எதிரியைப் பற்றி இப்போது என்ன நினைக்கிறாய்" என்றது. புலி, "அவன் சாமார்த்தியத்தைப் பற்றி நான் மதிப்பிட்டது தவறு என்று தெரிகிறது" என்றது.

**நீதி**: மற்றவர்களின் வலிமையை குறைத்து மதிப்பிடாதே. உனது வலிமையை மிகுதியாகவும் மதிப்பிடாதே.



வேடன் வேட்டையாட எங்கு சென்றான்?

___________________________________________________________________________

வேடன் எதைப் பாவித்து அதிகமான மிருகங்களைக் கொன்றான்?

___________________________________________________________________________

ஓடி ஒளிந்த மிருகங்களைப் பார்த்து புலி என்ன கூறியது?

___________________________________________________________________________

வேடன் எய்த அம்பு புலியின் உடலில் எங்கே பாய்ந்தது?

___________________________________________________________________________

இந்தக் கதையின் நீதி என்ன?

___________________________________________________________________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 3 |

**எதிர்ச் சொல் தருக.**

ஒளி ________________

வெப்பம் ________________

இன்பம் ________________

விளக்கு அணைதல் ________________

அழித்தல் ________________

**ஒத்த சொல் தருக.**

வருடம் ________________

காரியம் ________________

தனம் ________________

உலகம் ________________

வானம் ________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 3 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |

**சேர்த்து எழுதுக**

பரிசு + அளிப்பு =____________________

தை + பொங்கல் =____________________

தமிழ் + புத்தாண்டு =____________________

கிளி + தட்டு =____________________

மரம் + வேர் =____________________

**பிரித்து எழுதுக.**

எழுந்திரு = ________ + __________

தமிழ்ப்பாடசாலை = ________ + __________

ஓட்டப்போட்டி = ________ + __________

கடற்கரை = ________ + __________

வாசற்கதவு = ________ + __________

| வினா இல | 4 | புள்ளிகள் | 20 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் அட்டவணையில் நிகழ்காலம், எதிர்காலம், எழுதவும்**

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| நடந்தேன் | | |
| சிரித்தேன் | | |
| அழுதேன் | | |
| படித்தேன் | | |
| வந்தேன் | | |

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

பின்வரும் சொற்களை வைத்து வசனம் அமைக்கவும்.

1 ஒபரா ஹவுஸ்

2 சிட்னி துறைமுகப் பாலம்

3 கன்பரா பாராளுமன்றம்

4 காட்டுத் தீ

5 இமியு பறவை

________________________________________________

________________________________________________

________________________________________________

________________________________________________